செய்தி வெளியீடு

**தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்: 2020 மூன்றாம் காலாண்டு**


தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

நிதி அமைச்சு

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-011-2877938 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk


இலங்கையின், 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான (ஜூலை 1 முதல் செப்டெம்பர் 30 வரை) உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2010) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி(மொ.உ.உ), அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், கொவிட் -19 தொற்றுநோயின் முதல் அலைக்குப் பிறகு, வணிக நடவடிக்கைகளும், மக்களின் அன்றாட வாழ்க்கை முறையும் இயல்பு நிலைக்கு திரும்பியதால் நாடு இயல்பு நிலைக்கு திரும்பியது. இந்த சாதகமான நிலை பொருளாதார நடவடிக்கைகளில் சிறப்பாக செயல்பட, குறிப்பாக மூன்றாம் காலாண்டில், இதன் விளைவாக 2020 ஆம் ஆண்டில் முதல் முறையாக பொருளாதாரத்தில் 1.5 சதவீத நேர்வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளது. இந்த ஆண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் பொருளாதாரம் சுருங்கியதுடன் பொருளாதாரத்தின் பெரும் மீட்சியை இந்த பதிவு செய்யப்பட்ட நேர்வளர்ச்சி வீதம் பிரதிபலிக்கிறது. அதன்படி, 2019ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டோடு ஒப்பிடும்போது விவசாயத் துறை, உற்பத்தித் துறை, மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பத் துறை, தொலைத் தொடர்புத் துறை, நிதி மற்றும் காப்பீட்டு சேவைகள், உண்மைச் சொத்துக்கள் நடவடிக்கைகள், தொழில்சார் சேவைகள் மற்றும் தனியார் சுகாதார சேவைகள் உள்ளிட்ட பல சேவை நடவடிக்கைகள் நேர்வளர்ச்சி வீதங்களை அறிவித்துள்ளன.

ஆம் ஆண்டின் 2020மூன்றாம் காலாண்டிற்கான தேசிய கணக்கு மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையை வெளியிடுகையில், 2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 2.4 சதவீதத்துடன் நேரான வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது ஆம் ஆண்டின் 2020மூன்றாம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 1.5 சதவீத நேரான வளர்ச்சியென மதிப்பிடப்பட்டுள்ளது என்று தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது. ஆம் ஆண்டின் 2020 மூன்றாம் காலாண்டில் நிலையான விலையில் இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி

ரூபா 2,545,863 மில்லியன்கள் வரை அதிகரித்துள்ளதுடன், ஆம் ஆண்டின் 2019 மூன்றாம் காலாண்டில் ரூபா 2,509,418 மில்லியன்களாகவும் பதிவு செய்துள்ளது .மேலும், ஆம் 2020 ஆண்டின்மூன்றாம் காலாண்டில் நடப்பு விலையில் இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 4,085,213 மில்லியன்களாக அதிகரித்து பதிவு செய்ததுடன், ஆம் ஆண்டின் 2019 மூன்றாம் காலாண்டில் ரூபா 3,833,960 மில்லியன்களாகவும் பதிவு செய்துள்ளது .இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நடப்பு விலை மதிப்பில் 6.6 சதவீத நேரான மாற்றத்தை பதிவு செய்துள்ளது.

பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள், நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இக் காலாண்டில் தமது பங்களிப்பினை முறையே 8.2 சதவீதம், 27.7 சதவீதம், 56.8 சதவீதம் மற்றும் 7.4 சதவீதமாக பங்களிப்பு செய்துள்ளன. அதன்படி, 2020 ஆம் ஆண்டில் முதன்முறையாக, விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகளின் மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் நேர்வளர்ச்சி வீதங்களை அறிவித்துள்ளன, இது கோவிட் - 19 தொற்றுநோய்க்குப் பிறகு முக்கிய பொருளாதார நடவடிக்கைகள் மீட்கப்படுவதைக் காட்டுகிறது. விவசாயத் துறை, 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் விவசாய உற்பத்தியின் கூட்டப்பட்ட பெறுமதி கணிசமான வளர்ச்சியை 4.3 சதவீதம் அதிகரித்துள்ளது. அதைத் தொடர்ந்து கைத்தொழில் துறையும் இந்த காலாண்டில் 0.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. அவற்றில், உற்பத்தித் துறை, இந்த காலாண்டில் 5.3 சதவீதம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியுள்ளது, இது 2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டோடு ஒப்பிடும்போது. மேலும், சேவைத் துறையும் இந்த காலாண்டில் 2.1 சதவீத நேர்வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளது.

# விவசாயத் துறை

விவசாயத் துறையின் விரிவாக்கம் முக்கியமாக, உப பிரிவுகளுக்கிடையில், 2019 ஆம் மூன்றாம் காலாண்டோடு ஒப்பிடும்போது 'தானியங்கள் வளர்ச்சி' (256.6 சதவீதம்(, 'நன்னீர் மீன்பிடித்தல்' (20.6 சதவீதம்(, 'நெல் வளர்ச்சி' (15.5 சதவீதம்(, 'காய்கறிகளின் வளர்ச்சி' (11. 6 (சதவீதம், 'இறப்பர் வளர்ச்சி' (11.(சதவீதம் 5, 'பழங்கள் வளர்ச்சி' (8.3 சதவீதம்(, 'வாசனைத் திரவியங்கள் வளர்ச்சி' (6.0 சதவீதம் ( 'விலங்கு உற்பத்தி' (2.8 சதவீதம்( என்பன ஆம் ஆண்டின் 2020 இந்த காலாண்டில்மேலும் விரிவாக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும்கூட ஆம் ஆண்டின் 2020 மூன்றாம் காலாண்டில் 'கடல் மீன்பிடித்தல்'(11.6 சதவீதம்(, 'வனவியல் மற்றும் மரம் வெட்டல்' (7.8 சதவீதம்(, 'எண்ணைப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி தேங்காய் உள்ளடங்கலாக' (5.1 சதவீதம்(, 'தேயிலை வளர்ச்சி' (4.3 சதவீதம்( என்பன முந்தைய ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும்போது சுருக்கத்தைக் காட்டுகின்றன .

# கைத்தொழில் துறை

2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், ஒட்டுமொத்த கைத்தொழில் துறை நடவடிக்கைகள் 0.6 சதவீத நேர் விரிவாக்கத்தைப் பதிவு செய்துள்ளன. மூன்றாம் காலாண்டில், வணிக நடவடிக்கைகள் இயல்பாக்கப்பட்டதன் விளைவாக உற்பத்தித் துறையில் பதிவு செய்யப்பட்ட 5.3 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சி இந்த நேர் வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ளது. நாடு தழுவிய முடக்கம் நீக்கப்பட்ட பின்னர், பல உற்பத்தித் துறை நடவடிக்கைகள் உற்பத்திச் செயல்பாட்டில் அவற்றின் வழக்கமான திறன்களுக்குத் திரும்பத் தொடங்கின. இதன் விளைவாக, பல நடவடிக்கைகள் உற்பத்தித் துறையில் சாதகமான வளர்ச்சி வீதங்களை பதிவு செய்தன.

நாட்டின் கைத்தொழில் துறைக்கு அதிக பங்களிப்பு செய்யும் (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.9 சதவீத பங்கு) 'உணவு, பானங்கள் மற்றும் புகையிலை பொருட்களின் உற்பத்தி' நடவடிக்கை 2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடும்போது, 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 11.5 சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. மேலும், 'இரசாயனப் பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்து பொருட்களின் உற்பத்தி ' (13.1 சதவீதம்), 'இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி ' (4.8 சதவீதம்), 'பிற உலோகமற்ற கனிப் பொருட்களின் உற்பத்தி' (4.2 சதவீதம்), 'பிற உற்பத்தி' (1.1 சதவீதம்) மற்றும் 'புடவை மற்றும் ஆடையணிகள் உற்பத்தி மற்றும் தோல் தொடர்பான தயாரிப்புகள்' (0.1 சதவீதம்) மூன்றாம் காலாண்டில் சாதகமான வளர்ச்சி வீதங்களை அறிவித்துள்ளன. இருப்பினும், 'அடிப்படை உலோகங்கள் மற்றும் புனையப்பட்ட உலோகப் பொருட்களின் உற்பத்தி' (6.9 சதவீதம்) மற்றும் 'இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி' (0.7 சதவீதம்) ஆகியவற்றின் நடவடிக்கைகள் மறையான வளர்ச்சி வீதங்களை அறிவித்துள்ளன.

கைத்தொழில் துறை நடவடிக்கைகள் மத்தியில், கைத்தொழில் துறையில் 6.5 சதவீத பங்குகளை ஒத்திருக்கும் 'கட்டுமான நடவடிக்கை', இந்த காலாண்டில் கணிசமான சுருக்கத்தை 9.1 சதவீதம் பதிவு செய்துள்ளது, அந்நடவடிக்கை கொவிட் - 19 தொற்றுநோயின் தொடர்ச்சியான மறையான தாக்கத்தைக் காட்டுகிறது. கட்டுமான நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து, 'சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்' நடவடிக்கையும் 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 6.8 சதவீத மறை வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தது. இதற்கிடையில் 'மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல்' மற்றும் 'நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்' நடவடிக்கைகள் முறையே 2.1 சதவீத, 4.1 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களை இந்த காலாண்டில் பதிவு செய்துள்ளன.

# சேவைத் துறை

2020 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், சேவைத் துறையின் செயல்திறன் கணிசமான விரிவாக்கத்தை 2.1 சதவீதம் பதிவு செய்தது. இந்த துறையின் துணை நடவடிக்கைகளால் 'தொலைத்தொடர்பு' (16.5 சதவீதம்), 'தகவல் மற்றும் தொடர்பாடல் ஆலோசனை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள்' (13.5 சதவீதம்), 'நிதி சேவை நடவடிக்கைகள்' (12.3 சதவீதம்),

'மனித சுகாதார நடவடிக்கைகள்' (4.6 சதவீதம்), 'காப்பீட்டு நடவடிக்கைகள்' (4.1 சதவீதம்), 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்' (2.9 சதவீதம்), மற்றும் 'போக்குவரத்து சேவைகள்' (0.9 சதவீதம்).சிறப்பாக ஆதரிக்கப்படுகிறது. கொவிட் - 19 தொற்றுநோய்களின் பாதகமான விளைவு காரணமாக, 'தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள் சேவை நடவடிக்கைகளில் 42.1 சதவீதம் சுருக்கத்தையும் 'பிற தனிப்பட்ட சேவைகள்' இந்த காலாண்டில் 0.5 சதவீத சுருக்கத்தை பதிவு செய்துள்ளன.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அமைய, 2020 ஆம் மூன்றாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் (www.statistics.gov.lk/NationalAccounts/StatisticalInformation/GDP )
வெளியிடப்பட்டுள்ளது.

பி. எம். பி அனுர குமார
மேலதிக பணிப்பாளர் நாயகம்